**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, VANDAVASI.**

| | | |
|---|---|---|
| Case No | : | அ.வ.எண்.96/2017 |
| Deposition of Witness for | : | வா.சா. 2 |
| Name | : | கிருஷ்ணராஜன் |
| Father's/Husband's Name | : | கருத்தகுட்டி நயினார் |
| Village and Taluk | : | கூத்தவேடு கிராமம் : வந்தவாசி தாலுக்கா |
| Caste | : | -- |
| Nationality | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 86 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 24.08.2022.

**முதல் விசாரணை**

இந்த வழக்கின் வாதி சேகர் என் அண்ணன் மகன். 1ம் பிரதிவாதி வாதியின் அண்ணன். 1ம் பிரதிவாதியின் மனைவி 2ம் பிரதிவாதி. 3,5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகள்கள். 3ம் பிரதிவாதியின் கணவர் 4ம் பிரதிவாதி. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி இடையே நடைபெற்ற பாகப்பிரிவினையை நான் தான் முன்னின்று செய்து வைத்தேன். அதற்கு சாட்சி கையொப்பமும் இட்டேன். 1ம் பிரதிவாதிக்கு கிணறு, பம்புசெட் கூடிய 1 ஏக்கர் 10 செண்ட் நஞ்சை நிலமும், 4 ஏக்கர் புஞ்சை நிலமும் ஒதுக்கப்பட்டது. வாதிக்கு கிணறு பம்புசெட் வசதி இல்லாத 1 ஏக்கர் 29 செண்ட் நஞ்சை நிலமும், 5.91 ஏக்கர் புஞ்சை நிலமும் ஒதுக்கப்பட்டது. வாதியின் தாய் வழி பாட்டி வாதிக்கு உயில் மூலம் சொத்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட புஞ்சை நிலங்களை விற்றுவிட்டனர். நஞ்சை நிலங்களை மட்டும் வைத்துள்ளனர். வாதி அவரது தாயார் மற்றும் தாய்வழி பாட்டி ஆகியோரை பராமரித்து அவர்களது இறுதிச் சடங்குகளை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

வாதி மற்றும் 1ம் பிரதிவாதி தந்தை என் சகோதரர். பாகப்பிரிவினை பத்திரம் எழுதி 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். வாதி, 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் புல எண்கள் விவரம் எனக்கு தெரியாது. எனக்கும் என் சகோதரருக்கும் இடையில் 1971ல் பாகப்பிரிவினை நடந்தது. அதில் எனக்கு 3.70 ஏக்கரும் என் சகோதரருக்கு 3.68 ஏக்கரும் ஒதுக்கப்பட்டது. அந்த பாகப்பிரிவினை

ஆவணம் என்னிடம் இல்லை. வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயார் மற்றும் தாய்வழி பாட்டி ஆகியோரை வாதி மற்றும் 1ம் பிரதிவாதி இருவரும் பராமரித்து இறுதிக் காரியங்களை செய்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்து பிரச்சனை சம்மந்தமாக வாதி பிரதிவாதிகளுக்கு இடையே நான் சமரசம் ஏதும் செய்யவில்லை. வழக்கு சொத்துக்களுக்கும் நான் கூறும் பாகப்பிரிவினைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் அது சரியல்ல.

**மறுவிசாரணை -இல்லை.**